

புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2054 | மார்ச் 09, 2023 | புரட்சி 22 | முழக்கம் 08 | விலை: ரூ.3.00

## மீண்டும் ‘கருவறைத் தீண்டாமை’யை நிலைநாட்டத் துடிப்பு

# அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் சட்டத்தில் ‘ஓட்டை’ போட்டுவிட்டது நீதிமன்றம்

அனைத்து ஜாதியினரும் அர்ச்சகரா கலாம் என்று திராவிட மாடல் அரசு கொண்டு வந்த சமூக புரட்சித் திட்டத்தில் மாபெரும் ஓட்டையைப் போட்டிருக்கிறது மதுரை உயர்நீதிமன்ற கிளை.

மதுரை உயர்நீதிமன்ற கிளை நீதிபதி ஜி.ஆர். சாமிநாதன் திருவரங்கம் குமர வயலூர் கோயிலில் நியமிக்கப்பட்ட பார்ப்பனரல்லாத அர்ச்சகர்களான எஸ்.பிரபு, எஸ்.ஜெயபால் ஆகியோரது நியமனத்தை ரத்து செய்து உத்தரவிட்டிருக்கிறார்.

அதற்கு அவர் கூறுகிற காரணம், “இந்தக் கோயில் காமிகா ஆகமத்தின் கீழ் வருகிறது. இந்தப் பார்ப்பனரல்லாத அர்ச்சகர்கள் அந்த ஆகமக் கோயிலில் பூஜை செய்ய முடியாது. ஆதி சிவாச்சாரியார், ஆதி சைவர்கள் மட்டும் தான் இங்கு பூஜை செய்ய உரிமை உண்டு” என்று அவர் கூறியிருக்கிறார்.

பார்ப்பனரல்லாத அர்ச்சகர்கள் தங்களை ‘அகஸ்தியர் குலம்’ என்று கூறியபோது அதற்கு சான்று கேட்டார் நீதிபதி. காமிகா ஆகமபடி ஆதி சிவாச்சாரியார்கள் தான் பூசை செய்ய வேண்டும் என்றால் அவர்கள் சிவாச்சாரியார் குலம் என்பதற்கு சான்று கேட்டீர்களா என்று வழக்கறிஞர் கேட்ட போது நீதிபதியிடம் பதில் இல்லை.

வழக்கைத் தொடுத்தவர்கள் ஏற்கனவே இதே கோயிலில் அர்ச்சகர்களாகப் பணி யாற்றி வந்த கார்த்திக், பரமேஸ்வரன் என்ற இரண்டு பார்ப்பனர்கள். அவர்களுடைய மனுவை ஏற்றுக் கொண்ட நீதிபதி விசித்திரமான கருத்துக்களைக் கூறியிருக் கிறார்.

“ஏற்கனவே ஆகமம் விதிக்கும் சில மரபுப்படி பார்ப்பன அர்ச்சகர்களாகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள் அற நிலையத் துறையால் நியமிக்கப்பட்டவர்கள் அல்ல. மாறாக, பார்ப்பனரல்லாத அர்ச்ச கர்கள் அறநிலையத் துறையால் நியமிக்கப் பட்டவர்கள். ஏற்கனவே அர்ச்சகர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிற இந்தப் பார்ப்பனர்கள் அர்ச்சனை செய்ய ‘தகுதி’ படைத்தக் குலத்தில் பிறந்ததினால் மட்டும் அர்ச்சகர்களாக இருக்கிறார்கள். முறையாக ஆகமங்களைக் கற்றுத் தெரிந்திருக்கிறார்களா என்பதற்கு எந்த சோதனையும் நடத்தப்பட வில்லை. எந்தத் தேர்வையும் அவர்கள் எழுதவில்லை. அந்த குலத்தில் பிறந்தாலே போதும் அவர்கள் ஆகமங்கள் தெரிந்தவர்கள் தான்” என்ற அடிப்படையில் நீதிபதியின் தீர்ப்பு வந்திருக்கிறது.

இது பச்சை வர்ணாசிரமப் பார்வை யிலான ஒரு தீர்ப்பாகும்.

அதோடு மட்டுமல்லாமல் ஊதியமின்றி பல கோயில்களில் அர்ச்சகர்கள் பணியாற்றி சேவை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று தீர்ப்பு புகழாரம் சூட்டுகிறது. அவர்கள் அறங் காவலர்களால் நியமிக்கப்பட வேண்டிய அவசியமில்லை.

பழக்க வழக்கம், கலாச்சாரம், பாரம்பரிய மரபு இவைகளின் அடிப்படையில் அர்ச்சகர்களை நியமிக்கின்ற முறை தொடர்ந்து நீடிக்கலாம். இதில் ஆட்சி யாளர்கள் குறுக்கிட முடியாது என்ற கண்ணோட்டத்தில் இந்தத் தீர்ப்பு வந்திருக்கிறது.

இந்த தீர்ப்பின் வழியாக பல ஆகமக் கோயில்களில் நியமிக்கப்பட்ட பார்ப்பன ரல்லாத அர்ச்சகர்கள் பதவி நீக்கம் செய்யப்படும் ஆபத்தும் இருக்கிறது.

எனவே தமிழ்நாடு அரசு உடனடியாக இந்தப் பிரச்சினையில் தலையிட்டு வழக்கை அடுத்தக்கட்டத்திற்கு நகர்த்த சட்டப்பூர்வ நடவடிக்கைகளை எடுக்க முன்வர வேண்டும் என்பதே அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராக்கப்பட வேண்டும், சமத்துவம் நிலை நாட்டப்பட வேண்டும் என்பவர்களின் கோரிக்கை ஆகும்.

# சேலம் மாநாடு: களப்பணிகளில் தோழர்கள் தீவிரம்




ஏப்ரல் 29, 30 ஆகிய தேதிகளில் சேலத்தில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தும் “இது தமிழ்நாடு! இளம் தலைமுறையின் எச்சரிக்கை” மாநாட்டையொட்டி சேலம் கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் மார்ச் 04 ஆம் தேதி கொங்கனாபுரம் பகுதியில் கடைவீதி வசூல் மேற்கொள்ளப்பட்டது.

முதல்நாள் வசூல் ரூ.5490/- ஆனது. மாநாட்டுத் துண்டறிக்கை பொதுமக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

மாநாட்டையொட்டி சுவரெழுத்துப் பணி களையும் சேலம் மாவட்டக் கழகத் தோழர்கள் தீவிரப்படுத்தியுள்ளனர்.

கோவை மேட்டுப்பாளையத்தில் மாவட்டத் தலைவர் பா.இராமசந்திரன் ஏற்பாட்டில் சுவரெழுத்துப் பணிகள் நடைபெறுகிறது.

மாநாட்டு நிகழ்ச்சி நிரல் இறுதி செய்யப்பட்டு வருகிறது. மாநாட்டு நிதி திரட்டலுக்கான நன்கொடை சீட்டுகள் மாவட்டக் கழகங் களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தோழர்கள் குடும்பத்தோடு திரள ஆயத்தமாகிறார்கள்.

மாநாட்டின் தலைப்பையும் கருப்பு-சிவப்பு-நீலம் இணைந்து நிற்பதையும் பல்வேறு அமைப்புகள் வரவேற்றன.

தலையங்கம்

## வடநாட்டுத் தொழிலாளர் பிரச்சினையில் பா.ஜ.க.வின் அற்ப அரசியல்

தமிழ்நாட்டில் வேலை தேடி வரும் வடமாநிலத்தவர்கள் படுகொலைக்கு உள்ளாகிறார்கள்; திட்டமிட்டு தாக்கப்படுகிறார்கள் என்று சமூக வலைதளங்களில் வதந்தியைப் பரப்பினார்கள். இதனால் அச்சமடைந்த வடமாநில தொழிலாளர்கள் சொந்த மாநிலங்களுக்கு திரும்பத் தொடங்கினர். வதந்தியைத் திட்டமிட்டு பரப்பியவர்கள் பா.ஜ.க.வினர். தமிழக முதல்வர் உடனடியாகத் தலையிட்டு பீகார் முதல்வர் நிதிஷ்குமாரிடம் பேசி தமிழ்நாட்டில் அப்படிப்பட்ட நிலை ஏதும் இல்லை என்று விளக்கி வடமாநிலத் தொழிலாளர்களுக்கு உரிய பாதுகாப்புகளை வழங்கி வருகிறது என்று விளக்கியுள்ளார்.

வதந்தியைப் பரப்பிய பா.ஜ.க.வைச் சார்ந்த பிரசாந்த் உமாரோ, சுபம் சுக்ளா, யுவராஜ் சிங்ராஜ்புட் ஆகியோர் மீதும் வடமாநில இந்தி பத்திரிகையான ‘தைனிக்’ ஆசிரியர் பாஸ்கர் மற்றும் ‘தன்வீர் போஸ்ட்’ பத்திரிகை ஆசிரியரான முகம்மது தன்வீர் ஆகியோர் மீதும் தமிழ்நாடு காவல்துறை வழக்குகளைப் பதிவு செய்துள்ளது. இவர்களைக் கைது செய்ய வடமாநிலங்களுக்கு தமிழகக் காவல்துறை தனிப் பிரிவு விரைந்துள்ளது.

தமிழ்நாட்டில் நீண்டகாலமாக வடநாட்டு தொழிலாளர்கள் மீது தி.மு.க. வெறுப்பை விதைத்து வருகிறது என்று அறிக்கை வெளியிட்ட தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை மீதும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தமிழக காவல்துறை அதிகாரிகளும் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் உடனடியாகக் களமிறங்கி வடமாநிலத் தொழிலாளர்கள் அதிகமாகப் பணி செய்யும் பகுதிகளுக்கு நேரில் சென்று அவர்களுக்கு நம்பிக்கையை ஊட்டியதோடு தமிழக அரசு உரிய பாதுகாப்புகளை வழங்கும் என்று உறுதியளித்துள்ளனர். இது மிக மிக பாராட்டத்தக்க நடவடிக்கையாகும்.

இலட்சக்கணக்கான வடமாநிலத் தொழிலாளர்கள் ஏன் தமிழ்நாட்டை நோக்கி வருகிறார்கள்? இந்தி பேசும் வடமாநிலங்களில் பா.ஜ.க. ஆட்சி நடக்கும் மாநிலங்களில் வேலை வாய்ப்பு இல்லை என்பதால்தான். அந்த அவலத்தோடு தான் அங்கே ‘இந்துத்துவாவின்’ ஆட்சி நடக்கிறது. தமிழ்நாட்டில் ‘திராவிட மாடல் ஆட்சி’ இவர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கும் நிலையில் முன்னேறி நிற்கிறது. திராவிடம் நாட்டைக் கெடுத்து விட்டது என்று புலம்புவோர் அடிப்படையாக இந்த உண்மையை ஏற்க வேண்டும். மாறாக, இதிலும் தி.மு.க. ஆட்சி மீது குறை கூறிக் கொண்டிருப்பது இவர்களின் நேர்மையற்ற சமூகப் பொறுப்பற்ற அரசியலையே வெளிப்படுத்துகிறது.

தமிழ்நாட்டில் ஒன்றிய அரசு அலுவலகங்களான வங்கிகள், விமான நிலையங்கள், அஞ்சலகங்கள், தொடர் வண்டித் துறைகள், பொதுத் துறை நிறுவனங்களில் வடநாட்டுக்காரர்களையே ஒன்றிய ஆட்சி குவித்து வருவதை வன்மையாகக் கண்டிக்கிறோம். தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களுக்கே இந்த வேலைவாய்ப்புகளை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம்.

அதே நேரத்தில் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளுக்காக தமிழ்நாட்டுக்கு வேலை தேடி வரும் வடமாநிலத் தொழிலாளர்கள் மீது மொழி இனவெறியோடு வெறுப்பைக் கக்குவது ‘பாசிச’ சிந்தனையே யாகும். தமிழ்நாட்டில் சிறு, குறு, தொழில் நிறுவனங்கள் வணிக நிறுவனங்கள், கட்டுமானத் தொழில் போன்ற துறைகளில் வடமாநிலத் தொழிலாளர்கள் ஏராளம் வேலை செய்கிறார்கள். இவர்களை வெளியேற்றுவது என்றால், இந்த சூழலில் தமிழ்நாட்டில் உழைப்புச் சந்தையில் கடும் நெருக்கடிகள் உருவாகி விடும். இவர்கள் குறைந்த ஊதியத்தில் கடுமையாக உழைப்புச் சுரண்டலுக்கு உள்ளாக்கப்படுவதையும் தடுத்து நிறுத்த வேண்டிய அவசியமிருக்கிறது. தமிழக அரசைப் பொறுத்த வரையில் கொரானா 2ஆவது அலையின்போது சொந்த மாநிலங்களுக்கு திரும்பிச் செல்ல விரும்பிய தொழிலாளர்களுக்கு அவர்களுக்கான பல்வேறு உதவிகளை மனிதாபிமானத்துடன் வழங்கியதையும் முதல்வர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பார்ப்பனரல்லாதார் உரிமைக்காக சமூக, அரசியல், பண்பாட்டுத் தளங்களில் தொடர்ந்து போராடி வரும் திராவிடர் இயக்கம் பார்ப்பனர்கள் மீது எந்தத் தாக்குதலையும் நடத்திய வரலாறுகள் இல்லை. காந்தியார் கொலையின்போது சுட்டுக் கொன்ற கோட்சே ஒரு பார்ப்பனர் என்பதால் மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களில் பொது மக்களால் பார்ப்பனர்கள் தாக்கப்பட்டனர். அவர்கள் நிறுவனங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன. அந்த சூழ்நிலையை திராவிடர் கழகம் திராவிட இயக்கங்கள் நினைத்திருந்தால் தமிழ்நாட்டிலும் பார்ப்பனர்கள் மீதும் பெரும் தாக்குதலைத் தூண்டி விட்டிருக்க முடியும். மாறாக அமைதி காக்கச் சொன்னார் பெரியார். அண்ணாவும் அதே கருத்தை வலியுறுத்தினார். பார்ப்பனர்கள் பாதுகாப்பாகவே இருந்தனர். இப்போது பா.ஜ.க. நடத்தும் அற்பத்தனமான அரசியலை திராவிடர் இயக்கம் ஒரு போதும் கையில் எடுக்காது.

பீகார் துணை முதல்வர் தேஜஸ்வி, தமிழக முதல்வர் ஸ்டாலின் 70ஆவது பிறந்த நாள் விழாவில் பங்கேற்றார். பா.ஜ.க.வுக்கு எதிரான ஒரு அணியை உருவாக்க வேண்டும் என்று முதல்வர் பேசினார். அடுத்த நாளில் அவசரமாக வதந்தி கிளப்பி விடப்பட்டுள்ளது. பீகாரிகளுக்கும் தமிழர்களுக்கும் இடையே ஒரு பகைமையை உருவாக்கி மோடி எதிர்ப்பு அணியைக் குலைத்து விடலாம் என்ற சூழ்ச்சியோடு இந்த வதந்தி பரப்பப்பட்டுள்ளது. பீகார் மாநிலத்தின் அதிகாரபூர்வ பா.ஜ.க. சமூக வலைத் தளங்கள் இந்த பொய்யைப் பரப்பியதோடு அம்மாநில பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர், பீகார் மக்களை அரசியலுக்காக காவு கொடுக்கிறார் தேஜஸ்வி என்றும் வெளிப்படையாகவே பேசினார்.

தமிழ்நாட்டில் சில வடமாநில சமூக விரோத கும்பல் வன்முறை, கொள்ளைகளில் ஈடுபடுவதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தேவை என்பதில் நியாயம் இருக்கிறது. சமூக விரோத சக்திகளைக் கண்காணிப்பது வேறு; வடநாட்டிலிருந்து பிழைப்புக்காக தமிழகம் தேடி வந்தவர்களை விரட்டி அடிக்க வேண்டும் என்பது வேறு. பா.ஜ.க.வின் அற்பத்தனமான வெறுப்பு அரசியலை மக்களிடம் எடுத்துச் சொல்லி அவர்களைத் தனிமைப்படுத்த வேண்டும். பா.ஜ.க. பார்ப்பனியம் பிள்ளையையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டி மக்களை ஏமாற்றத் துடிக்கிறது.

மணியம்மையார் பிறந்த நாள் – மார்ச் 10

## அன்னை என்று புகழாமல் நாம் வேறு என்ன என்று புகழவல்லோம்?

தேன்மொழி



**பிறப்பும் கல்வியும் :** 1920ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 10ஆம் நாள், வேலூரில் பிறந்தவர் காந்திமதி (மணியம்மையின் இயற் பெயர்). அவரின் அப்பா கனகசபை விறகுக் கடை வைத்திருந்தார். அம்மா பத்மாவதி. காந்திமதி வேலூர், கொசப் பேட்டை அரசுப் பெண்கள் இடைநிலைப் பள்ளியில் படித்தார்.

மே 15, 1943ஆம் ஆண்டில் கனகசபை இறந்துவிட, எவ்வித வைதிகச் சடங்குகளும் இன்றி, தமிழ்ப் பாடல்களைப் பாட வைத்து இறுதிக் காரியங்கள் நடத்தினார் கனகசபையின் நண்பரான அண்ணல் தங்கோ. (தனித்தமிழ்ப் பற்றாளரான அண்ணல் தங்கோ அவர்கள்தான் காந்திமதி என்னும் பெயரைத் தமிழ்ப் பெயராகவும், காந்திமதியின் அரசியல் ஈடுபாடு கருதியும் க.அரசியல்மணி என மாற்றி அமைத்தவர் ஆவார்.) அந்த நிகழ்ச்சிக்குப் பெரியாரும் வந்திருந்தார். அதன்பின், 1943 ஜூலை மாதத்தில் முழுநேரப் பணியாளராக பெரியாரிடம் வந்துசேர்ந்தார். பெரியார் அவரை, குலசேகரன்பட்டினம் தமிழ்க் கல்லூரியில் தமிழ்ப் புலவர் படிப்பில் சேர்த்தார். தேர்வு எழுத மதுரை சென்றபோது அவருடைய உறவினர் ஒருவரை வழியில் சந்திக்க நேர்ந்தது, உடனே அவர் காந்திமதி வீட்டை விட்டு வெளியே வந்துவிட்டதாக நினைத்து அவரைப் பிடித்து காவல் நிலையத்திற்கு கூட்டிச்சென்றனர். அங்கு காவலர்களிடம், தான் தேர்வுக்கு செல்வதாக கூறி, தனது தேர்வுக்கான நுழைவுச் சீட்டைக் காட்டிப் புரிய வைப்பதற்குள் தேர்வு எழுதும் நேரமே முடிந்துவிட்டது. இவ்வாறு புலவர் கல்லூரி படிப்பை முடித்து பின் முழுநேர இயக்கச் செயல்பாட்டாளராக பெரியாருடன் பயணிக்க ஆரம்பித்தார்.

**பெரியாரின் உற்ற உதவியாளர் :** மணியம்மையார் பெரியாரின் உடல்நிலையின்மீது எப்போதும் கவனத்தோடு இருப்பார். மருத்துவரின் ஆலோசனைபடியே உணவுகளை வழங்குவார். பெரியாரின் நண்பர்கள், தொண்டர்கள் ஆசையோடு அவருக்குச் சாப்பிடக் கொடுத்தாலும், கண்டிப்போடு தவிர்க்க வைத்துவிடுவார். ஒருமுறை, மணியம்மைக்குத் தெரியாமல் பெரியாருக்கு, பிரியாணியை அவர் நண்பர் தந்துவிட, உடலுக்கு என்னவாகுமோ என்று பதறிப் போனார். இன்னும் சொல்லப்போனால் ஒரு குழந்தையைப் பார்த்துக் கொள்வதைப்போல, பெரியாரைக் கவனித்துக்கொண்டார். பெரியாரும் மணியம்மையாரை அம்மா என்றே அழைத்தார்.

ஒருமுறை பெரியார், இந்த வயதிலும் நான் சாகாமல் இருக்கிறேன் என்றால், இந்த அம்மாவால் என்பது யாருக்கும் தெரியாது. எனது உடம்புக்கு ஏற்ற உணவைப் பக்குவப்படி கொடுப்பது, உடை மாற்றுவது எல்லாம் இந்த அம்மாதான் என்று மணியம்மையாரைப் பற்றிச் சொல்கிறார் என்றால், மணியம்மையாரின் பணி எவ்வளவு அர்ப்பணிப்பு மிக்கதாக இருந்திருக்க வேண்டும்.

பெரியார் அவ்வப்போது தனது கிண்டலால் அம்மாவையும், சுற்றி இருப்பவர்களையும் நகைக்க வைத்தது உண்டு. கடினமான போராட்ட வாழ்க்கையிலும், தொண்டு மற்றும் தியாக வாழ்க்கையிலும் பயணிப்பவர்களுக்கும் இதழ் ஓரங்களில் மெல்லிய புன்னகைப் பூக்க செய்யும் நிகழ்வுகள் பல இருக்கும் தானே.

அவற்றில் ஒன்று: ஒரு சமயம் திருச்சியில் பெரியார் மாளிகையில் அய்யாவும், அம்மாவும் தங்கியிருந்தார்கள். அப்போது பணியாளர் பித்தளை, வெண்கலப் பாத்திரங்களை உருட்டிச் சத்தம் ஏற்படச் செய்தார். அம்மாவிற்குக் கோபம் வந்துவிட்டது. என்ன சத்தம் அங்கே என்று உரக்கக் கேட்டார்.

அப்போது பெரியார் அம்மாவின் சத்தத்தைக் கேட்டு, “அம்மா அவர்களே! பாத்திரத்தின் சப்தத்தை விடத் தங்களுடைய சப்தமே பெரிதாக இருக்கிறது” என்று தனக்குரிய பாணியில் நக்கல் தொனிக்கச் சொல்ல, கூடியிருந்த பிள்ளைகள் எல்லாம் குதூகலமடைந்து நகைத்தார்களாம்.

மிகவும் மகிழ்ச்சியாகவும் பிறரின் நலத்தில் அக்கறை கொண்டும் தனது இயக்க வாழ்க்கையைக் கொண்டு சென்றவர் மணியம்மையார்.

**மணியம்மையார் குறித்து புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் குயில் இதழில் எழுதிய தலையங்கமே மணியம்மையாரின் தொண்டுக்குச் சாட்சி.**

“பெரியார் செத்துக் கொண்டிருந்தார். தமிழர் அழுது கொண்டிருந்தார்கள். ஆனால், பெரியாரின் உடம்பை விட்டுப் பிரிந்து போக மூட்டை முடிச்சுகளுடன் காத்திருந்த உயிரைப் போகாதே என்று பிடித்து இழுத்து வைத்துக் கொண்டிருந்தவை இரண்டு.

ஒன்று அவரின் பெருந்தொண்டு; மக்கள் மீது அவர் வைத்திருந்த அருள் மற்றொன்று. ஆயினும், காற்றிறங்கிய

(4ஆம் பக்கம்)

## வரலாற்று ஆதாரங்களுடன் கொளத்தூர் மணி விளக்கம்

# செங்கல்பட்டு சுயமரியாதை மாநாடு நடத்தும் முடிவுக்கு பெரியார் வந்து சேர்ந்த காரணிகள்

*பிப்ரவரி 18, 2023 அன்று கோவை மாநகரக் கழகம் நடத்திய "1929 செங்கல்பட்டு முதல் சுயமரியாதை இயக்க மாநாடும், தமிழ் நாட்டு அரசியலும் கருத்தரங்க"த்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை. (சென்ற இதழ்த் தொடர்ச்சி)*

திருப்பூரில் 1922ஆம் ஆண்டு காங்கிரஸ் மாநாடு நடைபெறுகிறது, பெரியார் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருகிறார். "எல்லோருக்கும் கோயில் நுழைவு உரிமை வேண்டும் நாடார் உள்ளிட்ட அனைவருக்கும்" என்கிறார். அப்போது நாடாரும் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் இருந்த காலம், பெரியார் தென் மாவட்டங்களில் சுற்றுப்பயணத்தின் போது அருப்புக்கோட்டையில் நாடார் வாலிபர் சங்கம் வரவேற்பு கொடுக்கிறது. அய்யா எங்களையெல்லாம் கோவிலுக்குள் விடமாட்டேன் என்கிறார்கள், நீங்கள் தான் எதையாவது செய்ய வேண்டும் என்று கேட்கிறார்கள். பெரியார் சொல்கிறார் நியாயமான கோரிக்கை ஆனால் நீங்கள் பணம் சம்பாதிப்பதில் மட்டும் குறியாக இருந்து கொண்டு உரிமை வந்துவிட வேண்டும் என்பதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. நீயும் வா எல்லோரும் சேர்ந்து போராடலாம் நான் இப்பொழுதே ஆரம்பிக்கிறேன் என்கிறார்.

அடுத்த ஒரு வாரம் கழித்து தான் திருப்பூர் காங்கிரஸ் மாநாடு. அந்த மாநாட்டில் கோயில் நுழைவுக்காக தீர்மானம் கொண்டு வருகிறார், ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். ஏற்றுக் கொள்ள மறுத்துவர் யாரென்றால் மதுரை வைத்தியநாத அய்யர். அவர்தான் முதன்முதலில் கோயில் நுழைவுப் போராட்டத்தை நடத்தியவராம், அவர்தான் திருப்பூரில் எதிர்த்துப் பேசுகிறார். உனக்கு மனு சாஸ்திரம் என்ன சொல்கிறதென்று தெரியுமா? புராணம் தெரியுமா? இராமாயணம் தெரியுமா? சம்பூகனுக்கு தண்டனைக் கொடுத்தது தெரியுமா? என்றெல்லாம் பேசுகிறார்.

பெரியார் சொல்கிறார் எனக்கு அதெல்லாம் தெரிய வேண்டிய அவசியம் இல்லை. அது அப்படித்தான் சொல்கிறது என்றால் மனு சாஸ்திரத்தையும் இராமாயணத்தையும் எரிக்க வேண்டும். அதை ஏன் வைத்துக் கொண்டிருக்கிறாய், நீ உரிமையை கொடு. மனு சாஸ்திரம், இராமாயணம் பற்றியெல்லாம் எனக்கு கவலையில்லை என்று பேசுகிறார். இதை 1922ஆம் ஆண்டு சொல்கிறார். அப்பொழுது அவர் சுயமரியாதை இயக்கத்தை எல்லாம் ஆரம்பிக்கவில்லை. காங்கிரஸ்காரராக இருந்து கொண்டு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்து கொண்டு பேசியவர் பெரியார்.

அதற்குப் பின்னாலும் பெரியார் ராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் மாநாடு அப்பொழுது அவர் பொதுச் செயலாளராக இருந்தார். அவர் தலைமையில் மாநாடு நடக்கிறது. அந்த மாநாடு காரைக்குடி பள்ளத்தூரில் நடைபெறுகிறது. அந்த மாநாட்டில், அவர் தீண்டாமையைப் பற்றி பேசுகிறார். நீங்கள் ஏன் அந்த மக்களை தள்ளி வைக்கிறீர்கள், அவர்கள் குளிப்பதில்லை என்று சொல்கிறீர்கள், அழுக்குத் துணி போட்டுருக்கிறான் என்று சொல்கிறீர்கள், நாடார்கள் 'கள்ளு' இறக்குகிறார்கள், அவன் குடிக்கிறான் சரி,



அப்புறம் மாட்டுக் கறி தின்கிறான் என்று சொல்கிறார்கள். பிறகு பெரியார் சொல்கிறார், "உங்களிடம் கேட்பதற்கு சில கேள்விகள் உள்ளன. நீ குடிக்கவே நீர் எடுக்க குளத்தில் அனுமதி மறுக்கிற உனக்கு அவன் அழுக்காக இருக்கிறான் என்பதைச் சொல்வதற்கு யோக்கியதை இருக்கிறதா?" என்று கேட்கிறார். இது காங்கிரஸ் மாநாட்டில் பெரியார் பேசியது. நீ அனுமதி கொடு அதற்குப் பிறகு அழுக்குத் துணியோடு குளிக்காமல் இருந்தால் அதைப் பற்றி பேசலாம். கள்ளு இறக்குகிறான், கள்ளு குடிக்கிறான். கள்ளுக்கு மரம் விடுபவன் பெரிய ஜாதி, கள்ளுக்கடையை ஏலம் எடுக்கிறவன் பெரிய ஜாதி, கள்ளுக்கடையை நடத்துகிற அரசு பெரிய அரசாங்கம், இறக்குபவன் மட்டும் சின்ன ஜாதி, குடிக்கிறவன் சின்ன ஜாதியா என்று கேட்கிறார். அதே நேரத்தில் சீமைச் சாராயம் குடிப்பவனாக இருந்தாலும் கையைக் கட்டிக் கொண்டு துரை துரை என்று பின்னாலே சுற்றிக் கொண்டு நிற்கிறாய்.

> - *காங்கிரசில் இருந்த காலத்திலேயே அவரை இயக்கியது சுயமரியாதை உணர்வு தான். இராமாயணம், மனுசாஸ்திரத்தைத் தீயிட வேண்டும் என்று காங்கிரஸ் மாநாட்டிலேயே பேசினார்.*
> - *கள் இறக்கும் தொழிலைச் செய்பவன் மேல் ஜாதி; கள் குடிப்பவன் மட்டும் கீழ் ஜாதியா? என்று கேட்ட பெரியார், சீமைச் சாராயம் குடித்த பிரிட்டிஷ் துரைகளிடம் கைகட்டி நின்றவர்கள் இந்த பெரிய ஜாதி தான் என்று அம்பலப்படுத்தினார்.*

அடுத்து மாட்டுக்கறி சாப்பிடுவதைப் பற்றி சொல்கிறார். நீ எதைச் சாப்பிடுகிறாய்? கோழி சாப்பிடுகிறேன். கோழி என்னென்ன சாப்பிடுகிறது? மலத்தை, அழுகியதை, புழுவை, புழுத்ததை சாப்பிடுகிற கோழியை சாப்பிடுகிற நீ பெரிய ஜாதி. தவிடு, புண்ணாக்கு, புல் இதைச் சாப்பிடுகிற மாட்டை சாப்பிடுபவன் சின்ன ஜாதியா? எங்கே இதெல்லாம் கற்றுக் கொண்டீர்கள் என்று கேட்கிறார். அந்தக் கூட்டத்தில் தான் மனு சாஸ்திரம் பற்றியும் பேசுகிறார். மனுசாஸ்திரத்தில் உங்களையெல்லாம் என்ன சொல்லி இருக்கிறது என்று தெரியுமா? ஸ்லோகங்களை எல்லாம் குறிப்பிட்டு உங்களை சூத்திரன் என்று சொல்லுகிறது, சூத்திரன் என்றால் விபச்சாரி என்றும் வைப்பாட்டி மகன் என்றும் பொருள். இந்தப் பட்டம் உங்களுக்கு பரவாயில்லையா என்று கேட்கிறார். எல்லோரும் சேர்ந்து வாருங்கள் ஒழிப்போம் என்று கேட்கிறார். இது காங்கிரஸ்காரராக இருந்த போது பேசியது என்பதை கவனிக்க வேண்டும். 1919ஆம் ஆண்டு முதலே வகுப்புவாரி உரிமைப் பற்றி பெரியார் பேசி வருகிறார்.

1919ஆம் ஆண்டே திருச்சி மாநாட்டில் தீர்மானம் கொண்டு வருகிறார். "அந்தந்த மக்களுக்கு அந்த மக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கல்வியில் உத்தியோகத்தில் சம உரிமை வழங்க வேண்டும்" என்று தீர்மானம் கொண்டு வருகிறார். அதைத் தாமதப்படுத்திக் கொண்டே வருகிறார்கள். 1925இல் பெரியார் காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டிலிருந்து வெளியே வருகிறார். 1925ஆம் ஆண்டு மிகவும் கோபத்துடன் இருக்கிறார். பெரியார் கொண்டு வந்த வகுப்புவாரி தீர்மானத்தை விவாதத்துக்கே எடுத்துக் கொள்ளவில்லை. அதுதான் சிக்கல். விவாதித்து வாக்கெடுப்பு நடத்தி தோற்கடித்து இருந்தால் அதற்கு அவர் வருத்தப்பட்டிருக்க மாட்டார். மொத்தம் 30 பேரிடம் கையெழுத்து வாங்கினால் தான் தீர்மானத்தை எடுத்துக் கொள்ள முடியும் என்றார்கள். அவர் அதிகமாகவே வாங்கிக் கொடுக்கிறார். ஆனாலும் அதை எடுத்துக் கொள்ளவில்லை. இது பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் என்றார்கள். எது வகுப்புவாரி உரிமை கேட்பது. காந்தி சொன்னாரல்லவா இரட்டை வாக்குரிமை கொடுத்தால் இந்துக்கள் பிரிந்து விடுவார்கள் என்று, அதைப் போன்று இதையும் தள்ளுபடி செய்தார்கள். உடனே கோபத்துடன் வெளியே வருகிறார்.

பார்ப்பனர்களின் கூடாரம் ஆகிவிட்டது காங்கிரஸ் என்று சொல்லிவிட்டு வெளியே வருகிறார். வந்து அடுத்த ஆண்டு ஒரு மாநாடு நடத்துகிறார். பார்ப்பனரல்லாதார் மாநாடு என்று ஒரு மாநாட்டைக் கூட்டுகிறார். அதற்கு முன்பு பார்ப்பனரல்லாத மாநாட்டை நீதிக்கட்சிக்காரர்கள் நடத்திக் கொண்டிருந்தார்கள். பார்ப்பனரல்லாத இயக்கம். அரசியல் கட்சியாக நடந்து கொண்டிருந்தது. பெரியார் என்ன செய்கிறார்? காங்கிரஸ், நீதிக்கட்சிகளில் உள்ள பார்ப்பனரல்லாதாரை இணைத்து அதை நடத்துகிறார்.

யார் பார்ப்பனரல்லாதார் என்பதற்கு பெரியார் சொல்கிறார். நமது எதிரிகளான காங்கிரஸ் தேசத்தின் பெயரையும், காங்கிரஸ் பெயரையும், சுயராஜ்யம், உரிமை என்பதை வைத்துக் கொண்டு பாமர ஜனங்களை ஏமாற்றி உத்தியோகம் ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். அந்த மாநாட்டில் என்ன செய்ய வேண்டும். மாநாடு நடைபெறுவதற்கு முன்பு பார்ப்பனரல்லாத தலைவர்களுக்கு ஒரு விண்ணப்பம் என்ற தலைப்பில் பெரியார் எழுதுகிறார். தீண்டாமை விஷயத்தில் வெளிப்படையாய் சொல்லிவிட வேண்டும். அதாவது மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை என்று ஒப்புக் கொள்ள வேண்டும். இந்த இரண்டு விஷயத்திலும் ஆட்சேபனை உள்ளவர்கள் சுதந்திரத்திற்கும் சுயமரியாதைக்கும் விரோதிகள் என்று சொல்லுவோம். பிறகு பார்ப்பனரல்லாதார் என்றால் என்ன அர்த்தம் என்பதை சொல்கிறார். பார்ப்பனரல்லாத மக்கள் என்றால் 100-க்கு 90 விழுக்காடு உள்ள பாமர ஏழை மக்களை குறிக்குமே அல்லாமல் நூற்றுக்கு ஐந்து பேர் கூட இல்லாத ராஜாக்களையும் வக்கீல்களையும் ஜமீன்களையும் மாத்திரம் குறிக்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். பார்ப்பனரல்லாதார் முன்னேற்றம் என்பது நூற்றுக்கு 90 பேரின் முன்னேற்றத்தையும் சேர்த்து குறிக்குமே அல்லாமல் நூற்றுக்கு ஐந்து பேரின் முன்னேற்றத்தை மாத்திரம் குறிக்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

காங்கிரஸை விட்டு வெளியே வந்து விட்டார். காங்கிரசில் இருப்பவர்களை அழைத்து மாநாடு நடத்துகிறார். தற்போது நிதி அமைச்சராக இருக்கக் கூடிய பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் அவர்களுடைய தாத்தா என்.டி சுப்பிரமணியன் முதலியார் இந்த மாநாட்டில் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து நடத்துகிறார்.

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# மிராசுகள், ஜமீன்களை பார்ப்பனரல்லாதார் பிரிவில் சேர்க்க முடியாது என்றார் பெரியார்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

மதுரையில் நடக்கிறது அதில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருகிறார். “மக்கள் வாழ்வில் உயர்வு தாழ்வு இல்லை என்றும் சமூக வாழ்வில் எல்லோரையும் சமமாய் பார்க்க வேண்டும்” என்றும் இந்த மாநாடு தீர்மானிக்கிறது என்று ஒரு தீர்மானம்.

தீண்டாமை எனும் கொடிய வழக்கமானது மனிதருக்கு மனிதர் பிரித்து வைப்பதையும், நிரந்தரமாய் ஒற்றுமை இல்லாமல் செய்யவும் மனிதனின் பிறப்புரிமையான சுயமரியாதையை கெடுப்பதுமாய் இருப்பதால் அதை அடியோடு ஒழிக்க வேண்டும் என்று இந்த மாநாடு வற்புறுத்துகிறது. சடங்கு என்று ஒரு தீர்மானம் பார்ப்பனரல்லாத இந்துக்களென்போர் தங்களது மத சம்பந்தமான சுப சடங்குகளுக்கு தங்களை விட பிறவியில் உயர்ந்தவர் என்ற எண்ணத்தில் வேறு வகுப்பாரை வைத்து செய்து கொள்வதில் நாமே நம்மை தாழ்ந்த வகுப்பாராக ஒப்புக்கொள்ளவதாக இருப்பதால் அவ்வித மனப்பான்மை நம்முடைய சுயமரியாதையை அழிப்பதற்கு ஆதாரமாய் இருப்பதாலும் இந்த வழக்கத்தை அடியோடு அழிக்க வேண்டும் என்று இந்த மாநாடு தீர்மானிக்கிறது. இன்னொன்று முக்கியமான தீர்மானம் கோயில் நுழைவைப் பற்றியதாகும். வைக்கத்தில் நடத்திய போராட்டம் பற்றி சொன்னோம். இந்துக் கோயில்களில் இந்துக்கள் என்று சொல்லப்படுகிற எல்லா வகுப்பாருக்கும் பிரவேசத்திலும், பூஜையிலும், தொழுகையிலும் உரிமை உண்டு என்று இந்த மாநாடு தீர்மானிக்கிறது. இதன் பொருள் என்னவென்றால் கோயில் நுழைவு உரிமை மட்டுமின்றி பூஜை செய்யும் உரிமையும் நமக்கு வேண்டும். அர்ச்சகராகும் உரிமை வேண்டும். இந்துக்கள் என்று சொல்லப்படுகிற எல்லோருக்கும் இந்த உரிமை வேண்டும், அதென்ன ஒரு பிரிவுக்கு மட்டும் உரிமை என்று கேட்டார். அங்கு தொடங்கியது தான் அர்ச்சகர் உரிமைக் குரல். கடைசி வரைக்கும் பெரியார் பேசிக் கொண்டே வந்தார்.

அவர் காங்கிரஸை விட்டு வெளியே வந்த பிறகு போட்ட தீர்மானத்தைத்தான் இறுதிவரை அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகலாம் என்று தொடர்ந்து பேசிவந்தார். அதற்கு முன்பே சென்னை சட்டசபையில் இரண்டு முறை நிறைவேறிய இந்துமத பரிபாலன மசோதாவை இந்த மாநாடு முழு மனதோடு ஆதரித்து வரவேற்பதோடு வைசிராய் பிரபு இந்த மசோதாவிற்கு சட்டப்படி சம்மதம் கொடுக்க வேண்டும் என்று வைசிராய் பிரபுக்கு தெரிவித்துக் கொள்கிறது என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 1920ஆம் ஆண்டு நீதிக்கட்சி ஆட்சிக்கு வருகிறது. 1923ஆம் ஆண்டு சட்டம் கொண்டு வருகிறார்கள். சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றுகிறது ஆனால் ஒப்புதல் வழங்கவில்லை. அவர்களிடம் போய் பார்ப்பனர்கள் சொல்கிறார்கள் மூன்று வருடம் ஆகிவிட்டது அடுத்த முறையும் நீங்கள் தேர்ந்தெடுக்கப்படுவீர்களா என்று தெரியாது. இந்த கருத்துக்கு மக்களிடம் ஆதரவு இருப்பதாக தெரிந்தால் நாங்கள் செய்ய தயாராக இருக்கிறோம் என்று கூறுகிறார் வைசிராய். அடுத்த முறை ஒரு தேர்தல் வருகிறது. மீண்டும் ஒருமுறை தீர்மானத்தை நிறைவேற்றி சீக்கிரம் கையெழுத்துப் போட வேண்டும் என்று கூறி அனுப்புகிறார்கள். இது சுயமரியாதை இயக்க மாநாட்டில் அல்ல எல்லா கட்சிகளும் சேருகிற மாநாட்டில். இதன் தொடர்ச்சியாக தான் சுயமரியாதை இயக்க மாநாட்டை நான் பார்க்கிறேன்.

1925ஆம் ஆண்டு காங்கிரஸ் விட்டு வெளியே வந்த பிறகு சொன்னேன். அந்த மாநாட்டுக்கு முன்பாகவே தமிழர் மாநாடு என்று ஒன்றை நடத்த வேண்டும் என்று கூறுகிறார் பெரியார் பார்வையில் பார்ப்பனர்கள் தமிழரல்ல. தமிழ் பேசினாலும் அவர்கள் தமிழரல்ல. “தமிழ்நாட்டு பிராமணரல்லாதோர் கரிசனத்தில் அக்கறையுள்ள தமிழ்நாட்டு பார்ப்பனரல்லாதோர் எல்லோரும் இந்த மாநாட்டிற்கு வந்திருந்து தங்களது முன்னேற்றத்திற்கான ஒரு திட்டத்தைக் காணவும். அதை சரிவர அமலுக்குக் கொண்டுவர வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்” என்று எழுதினார். இது விஷயத்தில் தங்களது ராஜ்ஜிய அபிப்பிராய காரணங்களால் சொந்த அசௌகரிய காரியங்களால் அலட்சியமாக இருந்து விடாமல் கண்டிப்பாய் வரவேண்டும் என்று மறுபடியும் வினயத்துடன் கேட்டுக் கொள்கிறேன் என்று சொல்லி விட்டு அடுத்து சொல்கிறார் “தீண்டாமையை ஒழிக்க வேண்டியது பிராமணரல்லாதாரின் முக்கியமான ஒரு கடனாகும். ஏனெனில் தீண்டாதாரின் முன்னேற்றம் தான் பிராமணரல்லாதாரின் முன்னேற்றமாகும். தீண்டாதாரல்லாதரின் துன்பம் தான் பிராமணரல்லாதாரின் துன்பமாகும். தீண்டாமை ஒழிவதன் மூலமாகத்தான் பிராமணரல்லாதார் கடைத்தேற முடியும். தீண்டாமை ஒழிவதன் மூலமாகத்தான் நாடு சுயராஜ்யம் அடையும். ஆதலால் தீண்டாமை விலக்கில் கவலையுள்ளவர்களும், தீண்டாதார் எனப்படுபவர்களும் அவசியம் காஞ்சிபுரம் வந்து அதற்கென ஒரு மாநாட்டைக் கூட்டி காரியத்தில் பலன் தரத்தக்க திட்டத்தைக் காண வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்”. அதை ஒட்டி தான் இந்த சுயமரியாதை இயக்க மாநாடு அதன் தீர்மானங்களை நாம் பார்க்க வேண்டும் என்பதை முன்னுரையாக சொல்கிறேன்.

(தொடரும்)

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொதிமாடு போல் பெருத்துத் தொங்கும் அவர் விதையின் ஒருபால் ஒட்டிய ஆண்குறியினின்று முன்னறிவிப்பு இன்றிப் பெருகும் சிறுநீரை உடனிருந்து கலன் ஏந்திக்காக்கும் ஓர் அருந்தொண்டு, அவர் பெருந்தொண்டால் முடியாது; அவர் மக்கள் மேல் வைத்துள்ள அருளால் முடியாது. பெரியார் வாழட்டும் என்று தன் துடிக்கும் இளமையைப் பெரியார்க்கு ஒப்படைத்த ஒரு பொடிப் பெண்ணை. அன்னை என்று புகழாமல் நாம் வேறு என்ன என்று புகழவல்லோம்?

பெரியார் மேடை மேல் வீற்றிருப்பார். ஓர் இலக்கம் தமிழர் அவரின் தொண்டுக்காக மல்லிகை முதலிய மலர்களாலும், வெட்டிவேர் முதலிய மணப் பொருள்களாலும் அழகு பெறக்கட்டிய மாலைகளை ஒவ்வொன்றாகச் சூட்டிப் பெரியார் எதிரில் இரண்டு வண்டியளவாகக் குவிப்பார்கள்.

அதே நேரத்தில் எல்லாம் உடைய அன்னை மணியம்மையார் ஏதுங்கெட்ட வேலைக்காரிபோல் மேடைக்கு ஏறத்தாழ அரைக்கல் தொலைவில் தனியே உட்கார்ந்து சுவடி விற்றுக் கொண்டிருப்பார்கள். ஒரே ஒரு மாலையை என் துணைவியார்க்குப் போடுங்கள் என்று அந்தப் பாவியாவது சொன்னதில்லை.

எம் அன்னையாவது முன்னே குவிந்துள்ள மாலைகளை மூட்டை கட்டுவதன்றி அம்மாலைகளில் எல்லாம் மணக்கும் பெரியார் தொண்டை முகர்ந்து முகர்ந்து மகிழ்வதன்றி ஓர் இதழைக் கிள்ளித் தலையில் வைத்தார் என்பதுமில்லை.”- (குயில் இதழ், 10.04.1960)

மணியம்மையார் அவர்கள் பிறந்தது 10.03.1920. புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பிறந்தது 29.04.1891. தன்னை விட 29 வயது சிறிய பெண்மணியை, அன்னை என்று அழைக்காமல் வேறு என்னவென்று அழைப்பது ? எனக் குறிப்பிடுகிறார் என்றால் அம்மையாரின் அர்ப்பணிப்புக்கு ஈடு இணை இல்லை என்பதை நம்மால் உணர முடிகிறது.

**அம்மையார் மறைவு :** பெரியாரை 95 வயது வரை பாதுகாத்தவர் தனது உடல்நிலையைக் கவனிக்காமல் இருந்ததால் 58 வயதிலேயே காலமானார்.

1978 மார்ச் 16 ம் நாள் அன்று காலையில் நெஞ்சு வலி ஏற்பட்டதாக தோழர்களிடம் கூறினார். உடனே, சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார் ஆனால், சிகிச்சை பலனின்றி மாரடைப்பால் காலமானார். அய்யா மறைந்த போது ஏற்பட்ட அதே துக்கத்திற்கு கழகத் தோழர்கள் ஆளாயினர்.

அம்மையாரைப் பற்றிப் படிக்கும் போது மற்ற திராவிட இயக்கத் தலைவர்களை போன்று 90 வயதை கடந்து வாழ்ந்து இருந்தால் எங்கள் தலைமுறையும் அம்மையாரின் வீர செயல்களை நேரில் காணும் வாய்ப்பினைப் பெற்றிருக்கும் என்ற சிறிய ஏக்கம் கட்டாயம் அனைவருக்கும் ஏற்படும்.

## வினா விடை

- பிரபாகரன் விரைவில் வெளியே வருவார்; அதற்கான ஆதாரங்கள் கிடைத்தப் பிறகு, வெளியிடுவோம். **- பழ. நெடுமாறன்**

  ஆதாரங்களே, இன்னும் கிடைக்கவில்லையா, அய்யா!

- காரைக்கால் அருகே ஆக்கிரமித்துக் கட்டப்பட்ட இந்து முன்னணி அலுவலகத்தை ஜடாய்புரீஸ்வரர் கோயில் நிர்வாகம் இடித்ததைக் கண்டித்து இந்து முன்னணி ஆர்ப்பாட்டம். **- செய்தி**

  இந்து முன்னணிக்கு சபாஷ். இப்படித்தான் இந்து கோயில் நிர்வாகத்தை எதிர்த்துப் போராட வேண்டும். இனி இந்து கடவுள் ஜடாய்புரீஸ்வரரையும் எதிர்த்துப் போராடுங்க. அப்பத்தான் நீங்கள் ‘இந்து முன்னணி’.

- நாடு முழுதும் பசுவதைத் தடைக்கு சட்டம் இயற்ற – புராணங்களை ஆதாரம் காட்டி அலகாபாத் உயர்நீதிமன்றம் ஒன்றிய அரசுக்கு அறிவுறுத்தல். **- செய்தி**

  இப்போதெல்லாம் உயர்நீதிமன்றங்கள் அரசியல் சட்டங்களைப் புறக்கணித்து புராணங்கள் அடிப்படையிலே தீர்ப்புகள் வழங்குகின்றன. நீதிமன்றங்களின் பெயரை புராண இதிகாச பை என்று மாற்றி விடலாம்.

- ஆன்மீகம் இல்லை என்றால் தமிழ் இல்லை. **- ஆளுநர் தமிழிசை**

  ‘ஆன்மீகம்’ என்பதே தமிழ் இல்லை, மேடம்!

- ஆன்லைன் சூதாட்டத்துக்கு தமிழ்நாட்டில் 44 பேர் பலி; தடைச் சட்டத்துக்கு ஒப்புதல் தராமல் ஆளுநர் மவுனம். **- செய்தி**

  உஷ்; சத்தம் போடாதீர்கள். ஆன்மீகத்தையும் வேத கலாச்சாரத்தையும் காப்பாற்றும் ஆரிய சேவையில் அவர் மூழ்கிப் போய் ‘மோன’ நிலையில் தவமிருக்கிறார். தவத்தைக் குலைக்கக் கூடாது!

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 10th March 2023

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN